# சீஷராக்குங்கள்

***மத் 28:19*** *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும்* ***சீஷராக்கி,*** *பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*

***20*** *நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

உயிர்த்தெழுந்த இயேசு, தான் பரலோகம் செல்வதற்கு முன்பதாக தன் சீஷர்களுக்கு கொடுத்த ஒரு மாபெரும் கட்டளை **"சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்".** இங்கே **"சீஷர்"** என்ற வார்த்தைக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ள மூல கிரேக்க வார்த்தை - **"மத்யட்யூ"** என்பதாகும். இந்த வார்த்தையின் அர்த்தம் - மாணவன், படிப்பவன், கற்றுக்கொள்கிறவன், மனதில் கற்றுக்கொள்கிறவைகளை செயலில் காண்பிக்கிறவன் என்பதாகும். சீஷன் என்பவன், "ஒருவருடைய உபதேசங்களை கற்று, அறிந்து, அதை ஏற்றுக்கொண்டு, வாழ்க்கையில் அதை செயல்முறையில் காண்பிக்கிறவன்". இயேசு கிறிஸ்து, "சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்று சொன்னதன் அர்த்தம், **"எல்லோருக்கும் என் உபதேசங்களை கற்றுக்கொடுத்து, அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றை வாழ்க்கையில் செயல் முறைப்படுத்தி, என்னைப்போல வாழும்படியாக செய்யுங்கள்"** என்பதாகும். **"சீஷன்" "சீஷர்"** போன்ற வார்த்தைகள், புதிய ஏற்பாட்டில் சுமார் 273 இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் புதிய ஏற்பாட்டில் **"கிறிஸ்தவன்"** போன்ற வார்த்தைகள் சுமார் 3 இடங்களில் மாத்திரமே உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இயேசு தன் மாபெரும் கட்டளையில் உண்மையில், "சகல ஜாதிகளையும் **கிறிஸ்தவர் ஆக்குங்கள்**" என்று சொல்ல வில்லை, மாறாக **"சீஷராக்குங்கள்"** என்றே சொல்லி இருக்கிறார். நாம் எல்லோரும் ஒரு சீஷனாக இருக்கும்படியாகவும், மற்றவர்களை சீஷனாக்கவுமே இயேசுவால் அழைக்கப்பட்டவர்கள். அதுவே தேவனுடைய விருப்பம்.

'கிறிஸ்தவன்' என்னும் பெயர் இயேசுகிறிஸ்துவால் கொடுக்கப்பட்டது அல்ல. இது மற்ற மக்களாலோ அல்லது இயேசுவின் சீஷர்களாலோ அல்லது சீஷர்கள் தங்களை மற்றவர்களிடம் இருந்து அடையாளம் கண்டு கொள்ளும்படியாகவோ கொடுக்கப்பட்ட பெயர்.
உண்மையில் "சீஷனும்" "கிறிஸ்தவனும்" ஒரு மனிதரையே குறிப்பிடுகின்றன. அதாவது சீஷர்கள்தான் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.
***அப் 11:26*** *அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.*

இயேசு நம்மை அழைத்தது 'சீஷனாக' இருக்க, ஒரு சீஷனை மற்றவர்கள் அழைப்பது 'கிறிஸ்தவன்' என்று. என்றாலும் பலரும் இன்று கிறிஸ்தவனாக இருக்கிறார்களே தவிர, சீஷனாக இல்லை. இன்று சீஷன் வேறு கிறிஸ்தவன் வேறு என்ற ஒரு நிலை இருக்கிறது. பலரும் அறியாமையினால், தாங்கள் கிறிஸ்தவ பெற்றோருக்கு பிறந்ததால் அல்லது ஒரு கிறிஸ்தவ சபையில் பிறந்ததால் அல்லது தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிப்பதால், தான் ஒரு கிறிஸ்தவன் என்று விசுவாசிக்கிறார்கள். உலகம் யாரையும் கிறிஸ்தவன் என்று சொல்லலாம் ஆனால் வேதாகமத்தின் படி ஒரு சீஷனே கிறிஸ்தவன்.

இரட்சிக்கப்பட்ட பலரும் கூட சீஷனாக இல்லை. இதற்கு பிரதான காரணம் என்னவென்றால் இரட்சிப்பு இலவசம். ஆனால் சீஷன் ஆகுவதற்கு ஒரு விலை கொடுக்க வேண்டும். பலரும் அந்த விலையை கொடுப்பதற்கு தயாராக இல்லை.
**அது என்ன விலை ?**

***லூக் 14:26*** *யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*
***27*** *தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*

***லூக் 14:33*** *அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*

***மத் 10:24*** *சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல.*
***25*** *சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும். ..*

***யோவா 8:31*** *இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள;*

ஒரு சீஷனாக இருக்க.. இயேசுவின் உபதேசங்களை நன்கு கற்று அறிந்திருக்க வேண்டும், சகலத்தையும் வெறுக்க வேண்டும், இயேசுவுக்கு தன் வாழ்க்கையில் முதல் இடம் கொடுக்க வேண்டும், தன் சிலுவையை சுமக்க வேண்டும், இயேசுவுக்கு பின் செல்ல வேண்டும், இயேசுவைப்போல இருக்க வேண்டும், உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும்.... இந்த விலை கொடுக்க பலரும் தயங்கு வதால்தான், சீஷன் வேறு, கிறிஸ்தவன்

வேறு என்ற ஒரு வேதனையான நிலை இன்று இருக்கிறது.

என் சொந்த அனுபவத்தில் நான் கண்டு கொண்ட ஒரு வருத்தமான உண்மையை நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் இரட்சிக்கப்பட்ட பிறகு ஒரு சபையை தொடங்கி பலருக்கும் சுவிசேஷம் சொல்ல தொடங்கினேன். என்னோடு சில அருமையான விசுவாசிகளும் இணைந்து பலரையும் இரட்சிப்புக்குள் நடத்தினோம். இப்படியாக நாங்கள் சுவிசேஷம் சொல்லும்போது சிலர் சில வாக்கியங்களிலேயே இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள். பலரும் பல சந்தேகங்களை, கேள்விகளை கேட்பார்கள். அப்போது நாங்கள் நினைத்தோம் முதலில் **"இரட்சிப்பு"** என்றால் என்ன என்று நாம் படித்துக்கொள்வோம். அதன் பிறகு மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுப்போம் என்று. மற்ற எல்லா ஊழிய வேலைகளையும் நிறுத்தி வைத்து விட்டு சுமார் 4 மாதங்கள் இரட்சிப்பை பற்றி மாத்திரம் படித்தோம். ஒரு மனிதன் ஏப்படி பாவி ஆகிறான், அவன் எப்படி நீதிமான் ஆகிறான் என்று புரிந்து கொண்டோம். அதன் பிறகு வசனங்களின் அடிப்படையில் சொல்லிக்கொடுத்து பலருக்கும் சுவிசேஷம் அறிவித்து அவர்களை இரட்சிப்புக்குள் நடத்தினோம். இப்போது பலரும் என்னிடம் பல கேள்விகள் கேட்கும்போது, நான் அக்கேள்விகளுக்கு பதில் சொல்லு முன்பு ஒரு கேள்வி கேட்பதுண்டு, "சகோதரா, இப்போது நான் ஒரு பாவி என்று வைத்துக்கொள்வோம். எனக்கு வேத வசனங்களின் அடிப்படையில் சுவிசேஷம் சொல்லி தந்து, என் கேள்விகளுக்கு பதில் சொல்லி, என்னை இரட்சிப்புக்குள் வழி நடத்துங்கள்" என்று. **அப்படி நான் கேட்கும்போது பல முறைகளிலும் பல முதிர்ந்த விசுவாசிகளுக்கும், பிரசங்கிப்பவர்களுக்கும், எழுதுபவர்களுக்கும், ஒரு சபையை வைத்து நடத்தும் பல சகோதரர்களுக்கு கூட, சில பாஸ்டர்களுக்கும் கூட, வேத வசனங்களின் அடிப்படையில் இரட்சிப்பை சொல்லிக்கொடுக்க தெரிய வில்லை.** இது எனக்கு மிகவும் திகைப்பாகவும் ஆச்சரியமாகவும் வருத்தமாகவும் இருந்தது. பலரும் என்னிடத்தில் கோபப்பட்டார்கள். பலருக்கும் "நீங்கள் எந்த வசனத்தை கேட்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" என்று கேட்டால் பதில் சொல்ல தெரிவதில்லை. நல்ல இசையை கேட்டு, பிரசங்கங்களை கேட்டு, பேச்சுக்களை கேட்டு பலரும் இரட்சிக்கப்படுகிறார்கள். **இதற்காக நான் யாரையும் குற்றம் சொல்ல வில்லை.** ஆனால் ஒரு மனிதன் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்று வேதாகமம் சொல்லுகிறது என்று பார்ப்போம். நீங்கள் வேதாகமம் சொல்லுகிற படி இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? என்று உங்களை நீங்களே சோதித்துக்கொள்ளுங்கள். அப்படி இல்லை என்றால் வேத வசனங்களின் அடிப்படையில் உங்களது இரட்சிப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்.

*1பேது 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான* ***தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.***

*யாக் 1:18 அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச்* ***சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்.***

*எபே 1:13 நீங்களும் உங்கள்* ***இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது,*** *வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.*

இங்கேதான் சீஷனாக்குவதற்கும், கிறிஸ்தவனாக்குவதற்கும் உள்ள வேறுபாடு தெளிவாக தெரியும். ஒருவரை பார்த்து, " சகோதரா நீங்கள் பாவங்களை விடவேண்டும், சில பழக்க வழக்கங்களை விட வேண்டும், நரகத்துக்கு போகாமல் தப்பித்து பரலோகம் போக வேண்டும், ஞானஸ்நானம் எடுக்க வேண்டும், எங்கள் சபைக்கு வர வேண்டும், இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் " என்று சொல்லி அவரை ஒரு ஜெபத்தை செய்ய வைப்பது, **ஒருவரை கிறிஸ்தவனாக்குவது.**

ஒருவரை சந்தித்து, வேத வசனங்களின் அடிப்படையில் பாவம், மரணம், பாவ மன்னிப்பு, நியாயத்தீர்ப்பு, இரட்சிப்பு, நீதிகரணம், பரிசுத்தம் போன்ற சத்தியங்களை சொல்லிக்கொடுத்து, விசுவாசம் வர வைத்து, வேதவசனமாகிய வித்து அவர்களுக்குள் விதைக்கப்பட்டு அவர்களை இரட்சிப்புக்குள் நடத்துவது தான் **ஒருவரை சீஷனாக்குவது.** இதுதான் இயேசு போதித்திருக்கிற, கட்டளையிட்டிருக்கிற வழி.

நீங்கள் நினைக்கலாம் இப்படி செய்வதற்கு நீண்ட காலம் எடுக்கும், கூட்ட சுவிசேஷத்தின் (mass evangeslism ) மூலமாகத்தான் ஏராளமான பேருக்கு சுவிசேஷம் சொல்ல முடியும் என்று. இதில் எது உண்மை என்பதை கீழ்க்காணும் விளக்கத்தில் இருந்து பார்ப்போம்.

ஒரு சுவிசேஷம் பிரசங்கிக்கிற ஊழியக்காரர் கன்வென்ஷன் கூட்டங்கள் மூலமாக ஒரு மாதத்துக்கு 1000 பேரை இயேசுவை ஏற்றுக்கொள்ள வைக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். நமக்கு எல்லோருக்கும் நன்றாக தெரியும் இந்த 1000 பேரில் பலருக்கும் சத்தியம் ஓரளவுக்கு கூட தெரியாது. பலரும் ஒரு உணர்ச்சிப்பூர்வமாக இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள். இவர்களில் பலரது சான்றிதழ்களும், வீட்டில் சமுதாயத்தில் நடவடிக்கைகளும், அரசாங்க புள்ளி விபரங்களும் முன்பு இருந்தது போலவே இருக்கும். இவர்களில் பலருக்கும் இயேசுவை பற்றி மற்ற ஒருவரிடம் சொல்ல தெரியாது. இரட்சிப்பு, பாவ மன்னிப்பு, பரிசுத்தம், நீதிகரணம் போன்றவற்றை பற்றி அடிப்படை உண்மைகள் கூட தெரியாது.( எல்லாரும் இப்படி இருப்பது இல்லை. இதற்காக நான் யாரையும் குற்றப்படுத்த வில்லை). இப்படி தொடர்ந்து நடக்கும் போது, பன்னிரண்டரை வருடங்களுக்கு பிறகு சுமார் 1,50,000 "கிறிஸ்தவர்கள்" இருப்பார்கள்.

ஆனால், ஒரு மனிதர் ஒரு 6 மாத சமயம் எடுத்து ஒருவருக்கு வேதாகம அடிப்படை சத்தியங்களை, இயேசுவின் போதனைகளை சொல்லிக்கொடுத்து, அவருக்கு இரட்சிப்பு என்றால் என்ன என்று நன்றாக புரிய வைத்து, அவரை இரட்சிப்புக்குள் நடத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம். 6 மாத முடிவில், இயேசுவின் போதனைகளை அறிந்த, வாழ்க்கை மாற்றப்பட்ட, மற்றவர்களுக்கும் இரட்சிப்பை பற்றி சொல்லிக்கொடுக்க தெரிந்த 2 சீஷர்கள் இருப்பார்கள். இவர்கள் இருவரும் அடுத்த 6 மாதத்தில் ஒவ்வொரு சீஷரை உருவாக்குகிறார்கள் என்றால், ஒரு வருட முடிவில் 4 சீஷர்கள் இருப்பார்கள். இப்படி தொடர்ந்து இந்த 4 சீஷர்களும் அடுத்த ஒரு சீஷர்களை உருவாக்கினால் பன்னிரண்டரை வருடங்களுக்கு பிறகு இயேசுவுக்காக எதையும் செய்கிற, வல்லமையான, மற்றவர்களை இரட்சிப்புக்குள் நடத்துகிற, இயேசுவைப்போல வாழுகிற சுமார் **3,35,54,432** "சீஷர்கள்" இருப்பார்கள். ( உங்களுக்கு சந்தேகம் இருந்தால் ஒரு காகிதம் எடுத்து பெருக்கி பார்த்துக்கொள்ளுங்கள்). இவர்களால் வீடுகள் மாறும், தேசங்கள் மாறும், அரசாங்கங்கள் மாறும்.

இப்போது புரிகிறதா, ஏன் இயேசு **"சீஷராக்குங்கள்"** என்று சொன்னார். இந்த உண்மை புரியாமல் பல விசுவாசிகளும் சீஷனாக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்காமல் இருக்கிறார்கள். ஏதாவது ஒரு கூட்டத்துக்கு போய், அல்லது யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக ஒரு ஜெபத்தை சொல்லிவிட்டு தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டோம், இனிமேல் ஒன்றும் இல்லை என்று பலரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் சில குறிப்பிட்ட சபைகளில் சேருவது , அல்லது சில குறிப்பிட்ட சபைகளை விட்டு விலகுவது. இவைகள்தான் இரட்சிப்பு என்று நினைத்துக்கொள்கிரார்கள். ஒரு மனிதர் எப்படி இரட்சிக்கப்படக்கூடும் என்று வேதாகமம் தெளிவாக *ரோமர் 10: 9-10* ல் சொல்லுகிறது. *" என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.*
*10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.*

ஒருவர் தேவனுடைய வசனத்தை கேட்டு அதில் இருந்து விசுவாசத்தை பெற்று, நாம் எப்படி பாவி ஆனோம், பாவத்தின் சம்பளம் என்ன, இயேசு கிறிஸ்து எப்படி நமக்கு மீட்பு வாங்கி தந்தார், என்று வேத வசனங்களின் அடிப்படையில் புரிந்து இருதயத்தில் விசுவாசித்து, இயேசு என் இரட்சகர் என்று தன் வாயினால் அறிக்கைபண்ணும்போது இரட்சிக்கப்படுகிறார். அதோடு நின்று விடாமல் இரட்சிப்பை பற்றி படித்து கேட்டு, பாவம், மீட்பு, பாவ மன்னிப்பு, பரிசுத்த ஜீவிதம், கிருபையினால் நீதிகரணம், வேதாகம உடன்படிக்கை போன்ற அடிப்படை உபதேசங்களை கற்று அதில் நிலைத்திருக்கும்போது *( யோவான் 8:31,32 )*அவர் சீஷனாகிறார். இப்படிப்பட்ட ஒருவர் ஒரு உண்மையான சீஷனாக வாழ முடியும், மாத்திரமல்ல இப்படிப்பட்ட ஒரு சீஷன் மற்றொரு சீஷனையும் உருவாக்க முடியும். இதுதான் இயேசு கற்பித்திருக்கிற திட்டம்.

இன்று பலரும் ஒரு சீஷனாக இல்லாமல் சாதாரண கிறிஸ்தவர்களாக மாத்திரம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நோயில், துன்பத்தில், வறுமையில், துயரத்தில், தோல்வியில், வல்லமையின்றி, எதிர்காலத்தை பற்றி நிச்சயமின்றி, சாட்சியமின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்கள் பலருக்கும் தெரிவதில்லை. இயேசு கிறிஸ்துவை தன் சொந்த ரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்கள் ஒவ்வொருவரும், அத்தோடு நின்று விடக்கூடாது. இயேசு நம்மை எதற்காக அழைத்தாரோ, யாராக இருக்கும்படி அழைத்தாரோ, அப்படி இருக்க வேண்டியது நம் கடமை.

அருமை சகோதர, சகோதரிகளே இந்த வேதபாடம் உங்களை குற்றப்படுத்துவதற்காக எழுதப்படவில்லை. மாறாக நீங்கள் ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டு, ரட்சிக்கப்பட்டு ( மறுபடியும் பிறந்து ), ஒரு நல்ல சீஷனாக வாழும்படி உங்களை உற்சாகப்படுத்தும்படியாக எழுதப்பட்டது.
இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் அவரது சீஷனாக இருக்கும்படியாகவே அழைத்திருக்கிறார். வேறு எப்படியும் இருப்பதற்காக அல்ல. நம்மில் பலருக்கும் ஒரு நல்ல சீஷனாக வாழ ஆர்வம் உண்டு. என்றாலும் பல நிர்ப்பந்தங்களினாலும், சோர்வுகளாலும் ஒரு சாதாரண கிறிஸ்தவனாக வாழுகிற சூழ்நிலை. இப்பாடத்தில், ஒரு சாதாரண கிறிஸ்தவ விசுவாசியாக இல்லாமல், இயேசு அழைத்த, விரும்புகிற, ஒரு சீஷனாக - மற்றவர்களையும் சீஷனாக்குகிறவராக வாழுவது எப்படி என்று படிப்போம்.

ஒரு சீஷனாக வாழ்வதற்கு, முதலில்

## இயேசுகிறிஸ்துவுக்குள் நீங்கள் யார் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

*பிலே 1:6 உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்துஇயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல்செய்கிறேன்.*
உங்கள் விசுவாசம் இயேசுகிறிஸ்துவுக்காக பயன்பட வேண்டும் என்றால், முதலாவது உங்களிடம் உள்ள நன்மைகள் உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். இன்று பல விசுவாசிகளுக்கும் இயேசுகிறிஸ்துவுக்காக பயன்பட வேண்டும், நோயாளிகளை சுகமாக்க வேண்டும், சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டும், என்ற ஆவல் உண்டு. பல விசுவாசிகளுக்கும் "தேவனால் எல்லாம் செய்ய முடியும்" என்ற நம்பிக்கை உண்டு, ஆனால் **"என் மூலமாக தேவன் செய்வார்"** என்ற நம்பிக்கை துளியும் இல்லை. இதற்கு பல காரணங்கள் உண்டு. ஒரு பிரதான

காரியம் **"அவ்விசுவாசம்"** ( அவ நம்பிக்கை ). இந்த அவநம்பிக்கையை மக்களுக்கு கொடுப்பதில் பிரதான பங்குவகிப்பது, தவறான பிரசங்கங்களும் உபதேசங்களும், உலகத்தில் நடக்கும் காரியங்களும். இந்த **அவநம்பிக்கையைதான்** இயேசு *மத்தேயு 17:21* ல் **"இந்த ஜாதிப்பிசாசு"** என்று கூறுகிறார். இந்த "ஜாதிப்பிசாசாசு" ஆகிய அவநம்பிக்கையை போக்குவதற்கு இயேசு சொல்லியிருக்கிற ஒரு நல்ல வழி 'ஜெபமும் உபவாசமும்'. பலரும் ஒரு குறிப்பிட்ட பிசாசை ஓட்ட வேண்டுமென்றால் உபவாசம் அவசியம் என்று தவறாக நம்பிவிடுகிறார்கள். பிசாசுகள் ஓடுவது உங்களது உபவாசத்துக்கு பயந்து அல்ல. பிசாசுகள் ஓடுவது இயேசுவின் நாமத்துக்கு பயந்து *( பிலிப்பியர் 2:9 ).* **முதலில் இந்த ஜாதிப்பிசாசை துரத்துங்கள்.**

நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றால், உங்களைப்பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள். தயவு செய்து **"புது சிருஷ்டியான நீ"** என்ற வேதபாடத்தை படித்து புரிந்து கொள்ளுங்கள். பல விசுவாசிகளுக்கும் ஒரு தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. பலரும் சொல்வது, " இன்னும் நான் பரிசுத்தமாக வில்லை, இன்னும் நான் நீதிமானாக வில்லை, இன்னும் நான் வளரவில்லை, என்னால் இப்போது ஒன்றும் முடியாது ". இது மாதிரி உங்களை நினைக்க வைக்கிற பல போதனைகளையும், பிரசங்கங்களையும் நீங்கள் கேட்பதனால் இப்படிப்பட்ட ஒரு மன நிலைமையில் சோர்ந்து போய் விடுகிறீர்கள். இதற்கு தகுந்த படி வேதாகமத்தில் இருக்கிற வசனங்களை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். உங்களது நீதிகரணம், பரிசுத்தம், வளர்ச்சி, பரிசுத்த ஆவியானவர் உங்களோடு இருப்பது போன்ற சில காரியங்களை பற்றி வேதாகமம் சொல்கிற சில வசனங்களை மாத்திரம் உங்கள் முன் வைக்கிறேன். மனிதர்களும், **நீங்களும் உங்களை பற்றி நினைப்பதும் சொல்வதும் உண்மையா, அல்லது வேதாகமம் உங்களைப்பற்றி சொல்வது உண்மையா என்று நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.**

*ரோம 5:1 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே **நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்,** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.*

*1கொரி 6:11 உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், **பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.***

*எபி 10:10 இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் **பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.***

*யூதா 1:1 இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய **தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும்,** இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது:*

*எபி 10:14 ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் **பூரணப்படுத்தியிருக்கிறார்.***
***கொலோ** 2:10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் **பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.***

*யோவா 14:12 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் **நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.***

நான் சந்தித்திருக்கிற பல விசுவாசிகளும் உற்சாகமில்லாமல், தங்களால் முடியாது என்று சோர்ந்து போய் இருப்பதற்கான ஒரு காரணம், **"பரிசுத்த ஆவியானவரை பற்றிய சில தவறான உபதேசங்கள்".** பல விசுவாச சபைகளிலும் முதலில் நிறைய சமயம் செலவழிப்பது "பரிசுத்த ஆவியானவரை அழைப்பதற்காக". இதற்கு தகுந்த மாதிரி, ஆவியானவரே வாரும், இறங்கி வாரும், இப்போது வாரும், பெலமாக வாரும் என்ற அர்த்தத்தில் பல வல்லமையான இனிமையான பாடல்கள் பாடப்படுகின்றன. ஆவியானவர் எங்கோ உயரத்தில் மிதந்து கொண்டிருப்பது போலவும், அவர் கீழே இறங்கி வரவேண்டும் என்ற அர்த்தத்திலும் பல பாடல்கள் பாடப்படுகின்றன. இதற்காக நான் யாரையும் எந்த சபையையும் குற்றம் சொல்ல வில்லை. அது எனது நோக்கம் அல்ல. ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெற்றிருக்கிறீர்கள் என்றால் உங்களையும், பரிசுத்த ஆவியானவரையும் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை உங்கள் முன் வைக்கிறேன். **உங்களைபற்றி, பரிசுத்த ஆவியானவரைப்பற்றி மற்றவர்களும், நீங்களும் சொல்வது உண்மையா, அல்லது வேதாகமம் சொல்வது உண்மையா என்று நீங்கள் தீர்மானித்துக்கொள்ளுங்கள்.**

*யோவா 14:16 நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது **என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச்** சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*

*யோவா 14:17 உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; **அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால்,** நீங்கள் அவரை அறிவீர்கள்.*

*மத் 18:20 ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே **அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.***

*மத் 28:20 நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, **உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்** என்றார். ஆமென்.*

*எபி 13:5 நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; **நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை** என்று அவர் சொல்லியிருக்கிறாரே.*

அன்பு சகோதரா சகோதரி, நீங்கள் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டீர்கள் என்றால் உங்களுடைய ஏதாவது ஒரு செயலினால் அவர் உங்களை விட்டு போவதும், பின் அடுத்த ஆராதனையில் இனிமையான பாடல்களை பாடி அவர் மீண்டும் உங்களிடம் வருவதும் இல்லை. **அதற்காக துணிந்து பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தும் ஒரு செயலையும் செய்யாதீர்கள்.** அது உங்களுடைய இருதயத்தை கடினப்படுத்தி நீங்களாகவே பரிசுத்த ஆவியானவரை வேண்டாம் என வெறுக்கும்படியாக செய்யும். அப்போது மாத்திரமே பரிசுத்த ஆவியான வர் உங்களை விட்டு செல்வார். தாவீது ராஜா, உம்முடைய ஆவியை என்னை விட்டு எடுத்துப்போடாதேயும் என்று கதறினார், ஏனென்றால் அவர் "பழைய உடன்படிக்கைக்குள்" உட்பட்டவர். நீங்கள் புதிய உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள். நீங்கள் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டீர்கள் என்றால், அவர் **"என்றென்றைக்கும் உங்களுடனே இருக்கிறார்"**. நீங்கள் ஒருவேளை ***எபிரேயர் 6:4 - 8, எபிரெயர்: 10:26 - 29*** வசனங்களில் குறிப்பிட்டிருக்கிற நிபந்தனைகளுடன் இரட்சிப்பையும் பரிசுத்த ஆவியானவரையும் வேண்டாம் என்று வீசி விட்டீர்களானால், மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது.

பரிசுத்த ஆவியானவரை நீங்கள் பெற்றுக்கொள்வது **விசுவாசத்தால்** ***( கலாத்தியர் 3:2 ),*** உங்களது கிரியைகளால் அல்ல. அதுபோலவே பரிசுத்த ஆவியானவர் உங்களோடிருப்பதும் உங்கள் **விசுவாசத்தால்,** உங்களது கிரியைகளால் அல்ல. ***( கொலோ 2:6 ).*** ஆகவே பரிசுத்த ஆவியானவர் எப்போதும் உங்களோடு இருக்கிறார். அந்த நிம்மதியோடு, உறுதியோடு, ஆறுதலோடு, தைரியத்தோடு இருங்கள். அடுத்த முறை ஒரு நோயாளியை பார்க்கும்போதோ, சுவிசேஷம் சொல்ல வாய்ப்பு கிடைக்கும்போதோ, யாராவது ஒருவருக்காக ஜெபிக்க வாய்ப்பு கிடைக்கும்போதோ, தைரியமாக ஜெபியுங்கள். ஐயோ! இன்று காலை ஜெபிக்காமல், மனைவியிடம் சண்டை போட்டு விட்டு வந்தேனே, பரிசுத்த ஆவியானவர் என்னை விட்டு போயிருப்பாரே என்று சோர்ந்து போகாதீர்கள். ( அதற்காக ஜெபிக்காமல் இருக்காதீர்கள், மனைவியிடம் சண்டை போடாதீர்கள்).

இன்னும் சில விசுவாசிகள், பரிசுத்த ஆவியானவர் போகமாட்டார் ஆனால் 'குறைந்து விடுவார்' என்று நினைத்துக்கொள்கிறார்கள். இதற்கான ஒரு காரணம் ***மத்தேயு 25 ஆம் அதிகாரத்தில்*** இயேசு கூறிய பத்து கன்னிகைகளை பற்றியதான உவமை. இந்த உவமை இயேசுகிறிஸ்துவின் வருகையை, நியாயத்தீர்ப்பை, பரலோக ராஜ்யத்தை குறிக்கும்படியாக சொல்லப்பட்டிருப்பது. இயேசுவின் சபையாகிய "கன்னிகை" எப்படி ஆயத்தமாக இருக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருப்பது. ஆனால் பலரும் இந்த உவமையில் குறிப்பிட்டிருக்கிற **'எண்ணெயை' பரிசுத்த ஆவியானவருக்கு** ஒப்பிட்டு சொல்கிறார்கள். ஒரு உவமையில், ஒரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **'எண்ணெய்'** என்ற வார்த்தைக்கு **'பரிசுத்த ஆவியானவர்'** என்று அர்த்தம் எடுத்தால், அதே உவமையின் மற்ற இடங்களிலும் 'எண்ணெய்க்கு' 'பரிசுத்த ஆவி' என்றே அர்த்தம் கொள்ள வேண்டும். அப்படி பார்க்கும்போது இதில் மூன்று காரியங்களை நாம் கவனிப்போம்.

முதலாவது இந்த ஐந்து புத்தியில்லாத கன்னிகைகள் எண்ணெய் வைத்திருந்தார்கள், ஆனால் கொஞ்சமாக வைத்திருந்தார்கள் ***(வசனம் 8).*** அப்படியானால் பரிசுத்த ஆவியானவரை கொஞ்சமாக அல்லது அதிகமாக, அதாவது 1 லிட்டர் அல்லது 2 லிட்டர் என்று வைக்க முடியுமா? பரிசுத்த ஆவியானவர் ஒரு **"ஆள்"** (Person). ஒரு ஆள் உங்களோடு இருக்கிறார் என்றால் ஒன்று முழுமையாக இருக்க வேண்டும் அல்லது இல்லாமல் இருக்க வேண்டும். எப்படி அவருடைய சிறிதளவு அல்லது அதிக அளவு உங்களோடு இருக்க முடியும்?

இரண்டாவது 8 வது வசனத்தில் புத்தியில்லாத கன்னிகைகள் கேட்கிறார்கள் *"உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள்,"* என்று. அப்படியானால் ஒருவரிடத்தில் இருக்கும் பரிசுத்த ஆவியானரை, அவர் இஷ்டப்படி மற்றொருவருக்கு பகிர்ந்து கொடுக்க முடியுமா ?

மூன்றாவது 9 வது வசனத்தில், புத்தியுள்ள கன்னிகைகள், *"நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள்"* என்று சொல்கிறார்கள். அப்படியானால் பரிசுத்த ஆவியானவரை விற்கவும், வாங்கவும் முடியுமா ?. பரிசுத்த ஆவியானருக்கு 1 லிட்டர் 2 லிட்டர் என்று அளவுகள் இல்லை, பரிசுத்த ஆவியானவரை கூறு போட்டு பகிர்ந்து கொள்ள முடியாது, பரிசுத்த ஆவியானவரை வாங்கவும் விற்கவும் முடியாது. ஆகவே இதில் இருந்து புரியும் இந்த உவமையில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணெயோ அல்லது வேதாகமத்தில் ***ஆதியாகமம் 28:18, 2 ராஜாக்கள் 4:1-6; லூக்கா 7:46, 16:6*** போன்ற இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணெய், **சாதாரண எண்ணெயே தவிர, பரிசுத்த ஆவியானவரை குறிப்பிடுவது அல்ல.** இந்த எண்ணையை பரிசுத்த ஆவியானவர் என்று வியாக்யானம் செய்வது பலவித குழப்பங்களுக்கு ஏதுவாகும். உங்களில் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் இனிமையான ஆராதனைப்பாடல்களை, பயங்கர சத்தத்தை, வேகமான பாடல்களை, டிரம் முழக்கங்களை கேட்டு **வளருவதோ,** பின் வாரத்தின் மற்ற நாட்களில் **குறுகிப்போய் விடுவதோ** இல்லை. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.

ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் - உங்கள் கிரியைகளும், ஜெபமும், விசுவாசமும், பாடல்களும், ஆராதனைகளும், சத்தமும் உங்களை மாற்றும். அவைகள் தேவனை மாற்றுவதில்லை. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ***( எபிரேயர் 13:8 ).*** மாற வேண்டியது தேவன் அல்ல, நாம். இரண்டு அல்லது மூன்று பேராக நீங்கள் எங்கு

இருந்தாலும், "இயேசுவே! *மத்தேயு 18:20* வசனத்தின் படி நீர் எங்கள் மத்தியில் இருப்பதற்காக நன்றி", என்று சொல்லி வல்லமையான காரியங்களை செய்ய தொடங்குங்கள். ஒரு சீஷனாக நடந்து கொள்ளுங்கள்.

பல விசுவாசிகளும், பாடல் ஆராதனை நடத்துபவர்களும் ஜெப வேளையில், ஆராதனை வேளையில் "நான் பாவி, தேவனே இரக்கமாயிரும்" என்று உருக்கமாக ஜெபிக்கிறார்கள். இன்னும் "பாவியான எங்கள் மேல் ஆவியை ஊற்றும்" என்று பாடுகிறார்கள். அன்பு சகோதரா, நீங்கள் பாவி என்றால் உடனே இரட்சிக்கப்படுங்கள். நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றால் வேதாகமம் சுமார் 60 இடங்களில் உங்களை **"நீதிமான்" "Saint"** என்று அழைக்கிறது. நீங்கள் இரட்சிக்கப்படாவிட்டால் நீதிமான் அல்ல. நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றால் பாவி அல்ல. நீங்கள் இரட்சிக்கப்பட்ட பின்பு, "ஐயோ நான் ஒரு பாவி" என்று சொல்வது இயேசுவின் மீட்பை, அவர் சிந்திய இரத்தத்தை, தேவனுடைய அன்பை வேடிக்கையாக்குவது, வீணாக்குவது. அந்த வார்த்தைகளை சொல்லாதீர்கள். நீங்கள் நீதிமான். சீஷன். சீஷனாக நடந்து கொள்ளுங்கள். மற்ற விசுவாசிகள், சபை தலைவர்கள், "ஆ! நீங்கள் விசேஷமானவரா? நீங்கள் என்ன பெரிய நீதிமானா, அடக்கி வாசியுங்கள், இன்னும் நீங்கள் வளர வேண்டும், நீதிமானாக வேண்டும், பரிசுத்தமாக வேண்டும், கூடுதல் அபிஷேகம் பெற வேண்டும், சபைக்கு பிரச்சினைகளை உண்டு பண்ணி விடாதீர்கள்" என்று உங்களை மட்டம் தட்டுவார்கள். அவர்களை ஒரு பொருட்டாக எடுக்காதீர்கள். வேதாகமம் உங்களை பற்றி என்ன சொல்கிறதோ அதை விசுவாசியுங்கள். ***மாற்கு 16:15-18, யோவான் 14:12*** **ல்** குறிப்பிட்டிருக்கிற படி பெரிய காரியங்களை செய்யுங்கள்.

***2கொரி 5:17*** *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*
*18 இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.*
***1 பேதுரு; 2;9, 1 கொரிந்தியர்; 6; 11 1 கொரிந்தியர்; 6; 17, 2 கொரிந்தியர்; 5;21, எபேசியர்; 2; 10. , 1;13. , 3;17. 1 யோவான்; 5;12, கொலோசெயர்; 1; 25, 2. கொரிந்தியர்; 5;21. எபேசியர் 1; 5, 6 , கலா; 5;22,23 1 யோவான்; 2;20.*** போன்ற இன்னும் பல வசனங்களில் இருந்து இயேசுவுக்குள் நீங்கள் யார் என்றும், உங்களுக்குள் என்ன என்ன இருக்கிறது என்றும் நன்றாக அறிந்து கொள்ளுங்கள். உங்களிடத்தில் இல்லாத ஒன்றை நீங்கள் மற்றவர்களுக்கு கொடுக்க முடியாது. முதலாவது உங்களுக்குள் என்ன என்ன இருக்கிறது என்று நீங்கள் அறிந்து கொண்டால் அப்போது அவற்றை நீங்கள் மற்ற வர்களோடு பரிமாறிக்கொள்வீர்கள். இவைகளால் பலர் பலனடைவார்கள். அப்படி செய்கிற சீஷனாக இருங்கள்.

## "ஆகையால் புறப்பட்டு போகிறவன்" சீஷன்;

***மத் 28:19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,***
***20 நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.***

***மத்தேயு 28;19*** வது வசனம் " **ஆகையால்** நீங்கள் புறப்பட்டு போய் " என்று தொடங்குகிறது. எனவே, எதனால் புறப்பட்டு போய், என்று பார்க்க வேண்டியது அவசியம். அதற்கான விடை 18ம் வசனத்தில் உள்ளது. ***மத் 28:18*** *அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

தேவன் மனிதனை சிருஷ்டித்த போது பூமியில் முழு அதிகாரமும் கொடுத்திருந்தார். ***( ஆதி; 1;28, சங்; 8;6-8, சங்; 115;16. ).*** மனிதன் சாத்தானுக்கு கீழ்ப் படிந்ததால் இந்த அதிகாரத்தை சாத்தானுக்கு கொடுத்தான் ***( ரோமர்; 6;16 ).*** இயேசு கிறிஸ்து மனிதனாக வந்து, மரித்து, உயிர்த்தெழுந்து இந்த அதிகாரத்தை மீண்டும் பெற்றுக்கொண்டார். இப்போது இந்த அதிகாரத்தை தன் சீஷர்களோடு பகிர்ந்து அவர்களை தன் ஸ்தானாபதிகளாக *(ambassadors)* ***( 2 கொரி; 5;20 )*** அனுப்புகிறார். இந்த அதிகாரத்தோடு புறப்பட்டு போகிறவன் சீஷன். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள், தேவன் அதிகாரத்தை உங்களிடம் தந்திருக்கிறார். இப்போது அதிகாரம் இருப்பது உங்களது கையில். உங்களது கையில் அதிகாரத்தை வைத்துக்கொண்டு, தேவனை நோக்கி, "தேவனே அதை செய்யும், தேவனே இதை செய்யும்" என்று தேவன் மேல் பழியை போடாதீர்கள். அது அவ்விசுவாசம்.
***மாற் 11:22*** *இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.*
*23 எவனாகிலும் இந்த* ***மலையைப் பார்த்து:*** *நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*
பலரும் சொல்வார்கள், வாழ்க்கையில் பிரச்சினைகள், துன்பங்கள், மலைகள் வரும்போது நீ அவற்றை பார்க்காதே. இயேசுவை நோக்கிப்பார். அவர் விடுதலை தருவார், கண்ணீரை துடைப்பார், கரம் நீட்டுவார், என்று. இவைகள் எல்லாம் இரட்சிக்கப்படாத உலக மக்களுக்கு. இரட்சிக்கப்பட்ட உங்களுக்கு பொருந்தாது. ஒரு முறை கூட சரியாக வசனத்தை படித்து பாருங்கள், **"மலையைப் பார்த்து"**. உங்கள் முன் ஒரு மலை வரும்போது, பயந்து திரும்பி 'இயேசுவே ஓடி வாரும்' என்று ஓடாதீர்கள். ( தயவு செய்து இதை தவறாக மனதிலாக்கிக்கொள்ளாதிருங்கள்). திரும்பாதீர்கள். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள், உங்களது ஆவிக்குரிய

போராயுதங்கள் எல்லாம் இருப்பது உங்கள் 'முன்பக்கத்தில்', உங்களது முதுகுக்கோ, உடம்பின் பின் பாகத்துக்கோ என்று ஒரு ஆவிக்குரிய போராயுதமும் வேதாகமத்தில் இல்லை. நீங்கள் திரும்பும் பட்சத்தில், எதிரி உங்களை எளிதாக தாக்கக்கூடும். **மலையைப்பார்த்து இயேசுவைப்பற்றி சொல்லுங்கள். இயேசுவைப்பார்த்து மலையைப்பற்றி சொல்லாதீர்கள்.** இயேசுவிடம் சென்று, ஒரு மலை வந்தது, நீர் எனக்கு தந்திருக்கிற அதிகாரத்தை வைத்து அதை தகர்த்தேன் என்று சொல்லுங்கள். ஒரு நிமிடம் எண்ணிப்பாருங்கள் இயேசு எவ்வளவு சந்தோஷப்படுவார்? நீங்கள் சிறிய பிள்ளையாக இருக்கும்போது, உங்கள் வீட்டில் ஒரு விஷப்பூச்சி வந்து விட்டால், உடனே அம்மா! அப்பா! ஓடி வாருங்கள், இந்த பூச்சியை அடியுங்கள் என்று அழைப்பீர்கள். இப்போது அமேரிக்காவிலோ, துபாயிலோ இருக்கும் உங்களது வீட்டினுள் ஒரு விஷப்பூச்சி வந்து விட்டால் உடனே தொலைபேசியை எடுத்து, "அம்மா! அப்பா! உடனே அடுத்த விமானத்தில் ஏறிவந்து இந்த பூச்சியை அடியுங்கள்" என்று கதறுவீர்களா. ஒரு வேளை நீங்கள் இப்படி அழைத்தால், எதற்காக இவனை இவ்வளவு பெரியவனாக வளர்த்தோம் என்று உங்கள் பெற்றோர்கள் நினைக்க மாட்டார்களா? அதேசமயம் தொலைபேசியில், " அம்மா, நேற்று உங்கள் பேத்தி தூங்கிக்கொண்டிருக்கும்போது அவளை கடிக்க ஒரு தேள் வந்தது, உடனே துணிந்து அதை என் காலால் மிதித்து கொன்றேன்" என்று நீங்கள் சொல்வதை கேட்டு, உங்கள் அம்மா ஒருவேளை பதறக்கூடும். ஆனால் உங்கள் அப்பா பிறகு உங்கள் அம்மாவிடம் சொல்வார், " என்ன நினைத்துக்கொண்டாய்? அவன் என் மகன், தைரியசாலி " என்று. அவர் எவ்வளவு பெருமைப்பட்டுக்கொள்வார். "விழுப்புண்ணா, புறப்புண்ணா" என்று கேட்க வேண்டிய பரம்பரையை சார்ந்தவர்கள் அல்லவா நீங்கள்.

***யாக் 4:7** ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.*
"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். **அப்பொழுது** அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். "எதிர்த்து நிற்க வில்லை" என்றால் அவன் ஓட மாட்டான்.

பலரும் தாங்கள் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பிறகு, எப்படியும் பரலோகம் போவோம் என்ற எண்ணத்தோடு, சாதாரணமான முறையில், இயேசுவை அறியாதவர்கள் வாழுவதைப்போன்ற ஒரு வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏதாவது தேவைக்காக மாத்திரம் தேவனை தேடுகிறார்கள். ஆனால் இயேசு சொல்வது " சீஷன் **போக வேண்டும்** ". தான், தன் வேலை, தன் குடும்பம், தன் தேவைகள், தன் மக்கள், தன்னலம், தன் பணம், தன் எதிர்காலம்...என்று மாத்திரம் இருக்காமல் மற்றவர்களிடத்துக்கு போகவேண்டும். இன்று பலரது வாழ்க்கையும், பிள்ளைகள் பள்ளியில் இருந்து திரும்பி வருவதற்குள், கணவன் அல்லது மனைவி (இருவரும் வேலை செய்யும் பட்சத்தில்) வேலையில் இருந்து திரும்பி வருவதற்குள், "வீட்டு வேலைகளை முடிக்க வேண்டுமே" என்ற ஒரே நோக்கத்துடனே ஓடிக்கொண்டிருக்கிறது. பலருக்கும் பணம் சம்பாதிப்பதற்காக வேலை செய்வதற்கே நேரம் சரியாக இருக்கிறது. வேலை, தன் குடும்பம், தூக்கம், ஷாப்பிங், இந்தியாவுக்கு பணம் அனுப்ப வேண்டும் என்றே வாழ்க்கை முழுவதும் ஓடிக்கொண்டிருக்கிறது. இயேசு மரித்தது சீஷர்களுக்காக மாத்திரம் அல்ல. இந்த உலகம் முழுவதற்குமாக. *( 1 யோவான்; 2;2, யோவான்;1;29 ).* இயேசு மீட்டுக்கொண்டது சீஷர்களை மாத்திரம் அல்ல. இந்த உலகம் முழுவதையும். சகல ஜாதிகளையும். பலரும் இதை அறியாமல் இருக்கிறார்கள். எனவே இதை அவர்களிடம் **" சென்று சொல்வது "** நம்முடைய தலையாய கடமை. இது இயேசு கிறிஸ்துவின் கட்டளை. என்னிடத்தில் வேதாகமத்தில் இருந்து சில சந்தேகங்களை பலரும் கேட்பதுண்டு. எனக்கு தெரியும் என்றால் என்னால் முடிந்த வரை நான் அவர்களுக்கு சொல்லிக்கொடுப்பேன். என்னுடைய வேதபாட வகுப்புகளிலும் இடையில் எழுந்து கேள்வி, சந்தேகம் கேட்க எல்லோருக்கும் உரிமை கொடுப்பேன். ஆனாலும் பலரிடம் நான் சொல்வது, **"சகோதரா, நீங்கள் கேள்வி கேட்பது மிகவும் நல்லதுதான், ஆனால் நீங்கள் ஏற்கனவே கற்றதை வைத்து இதுவரை யாரிடத்திலாவது சுவிசேஷம் சொல்லி அவரை ரட்சிப்புக்குள்ளாக நடத்தியிருக்கிறீர்களா?"** இதற்கு கிடைக்கும் பதில் பல வேளைகளிலும் **"இல்லை"** என்பதே.

தேவன் உங்களுக்கு அதிகாரம் தந்திருக்கிறார். அந்த அதிகாரத்தை கையில் வீணாக வைத்திருப்பது சரியா? அந்த அதிகாரத்தோடு செல்லுங்கள், சொல்லுங்கள். உங்கள் வேலையிடங்களில், இப்போது இருக்கும் இடத்தில், குடும்பத்தில், பயணத்தில், ஊரில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். சென்று அவர்களை சந்தியுங்கள். சில சமயங்களில், அவர்களோடு நட்பை வளர்த்துக்கொண்ட பின் சுவிசேஷம் சொல்லுங்கள். இரட்சிப்பை எப்படி சொல்லிக்கொடுப்பது என்று வசனங்களின் அடிப்படையில் ஒரு பாடத்தை தயார்படுத்தி, அந்த வசனங்கள் அனைத்தையும் மனப்பாடம் செய்து வைத்துக்கொள்ளுங்கள். அநாவசியமான வாக்குவாதங்களுக்கு இடங்கொடாமல், வசனத்தை அடிஸ்தானமாக வைத்து பேசுங்கள். நிச்சயமாக ஆவியானவர் உங்கள் மூலமாக கிரியை செய்வார். ( உங்களுக்கு தேவையானல் நான் முன்பு எழுதியிருக்கிற " இரட்சிப்பு " " ஒரு மனிதன் எப்படி பாவி ஆகிறான், எப்படி நீதிமான் ஆகிறான் " என்ற வேதபாடங்களின் ஒரு பிரிண்ட் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். அதில் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்கள் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் )

உங்கள் விசுவாச சபைகளில் எல்லாம், பாடல் பாடுவதற்கு பயிற்சி, ஆராதனை நடத்த பயிற்சி, சிறுவர்களுக்கு பலவிதமான பயிற்சி, பெண்கள் கூடுகை, ஆண்கள் கூடுகை, வரவுசெலவு கணக்கு பார்க்க கூடுகை, திட்டமிடுதல் என்று பலவிதமான பயிற்சிகள் செய்வீர்கள். பெரிய ஊழியர்களை அழைத்து அபிஷேக ஆராதனை, இரண்டாம்

வருகை, விடுதலை, கட்டவிழ்ப்பு, வல்லமை... இப்படி பல ஆராதனைகள், வகுப்புகள் நடத்துகிறீர்கள். இவைகள் எல்லாம் நல்லது. இதற்காக நான் உங்களை வாழ்த்துகிறேன். ஆனால் இயேசுவின் ஒரு பிரதான கட்டளையாகிய, "சீஷராக்குங்கள்" என்ற கட்டளையை நிறைவேற்ற, **எப்போதாவது ஒரு முறையாவது "இரட்சிப்பை மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுப்பது எப்படி?" என்று ஒரு பயிற்சி வகுப்பு நடத்தியிருக்கிறீர்களா?.**

அன்பு சகோதரா, சகோதரி, இதற்காக யாரையும் குற்றம் சொல்ல வேண்டியதில்லை. இயேசு உங்களிடம் அதிகாரம் தந்திருக்கிறார், **"ஆகையால் புறப்பட்டு போங்கள்". தைரியமாக செல்லுங்கள். சுவிசேஷம் சொல்லுங்கள்."** தேவன் கிரியை செய்வார்.

***மாற் 16:20** அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.*

## தேவனுக்கு பயன்படுகிறவன் சீஷன்.

மறுபடியும் பிறந்த ஒவ்வொருவருக்குள்ளும் தேவன் வசிக்கிறார்.

***கலாத்தியர் 2:20, யோவான் 14:16,17, 2 கொரிந்தியர் 5:18, மத்தேயு 28:20, எபிரேயர் 13:5.***

புதிய உடன்படிக்கையின் படி, நம்முள்ளில் வசிக்கும் தேவன் மற்றவர்களை சென்றடைய நம்மூலமாகவே கடந்து செல்ல பிரியப்படுகிறார். புதிய ஏற்பாட்டின் பல இடங்களிலும் சுவிசேஷம் சொல்ல, விடுதலை கொடுக்க தேவன் தன் விசுவாசிகளையே உபயோகப்படுத்தினதை காணலாம். அப்போஸ்தலர் 10 ம் அதிகாரத்தில், கொர்நெலியுவை சந்தித்த தேவதூதன் நேரடியாக அவனிடம் சுவிசேஷம் சொல்லாமல் பேதுருவை அழைக்கும்படியாக சொல்லுகிறான். ஏன் அந்த தூதன் நேரடியாக சுவிசேஷம் சொல்லவில்லை, அவன் சொல்லியிருந்தால் இன்னும் வல்லமையாக இருந்திருக்குமல்லவா? ஏனென்றால் அவர்களுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை. சுவிசேஷம் சொல்வதற்கும் அதை உறுதிப்படுத்தும்படியாக உள்ள அடையாளங்கள் அற்புதங்களை செய்வதற்கும் உள்ள உரிமை விசுவாசிகளாகிய நமக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

**இப்போது தேவன் உங்கள் மூலமாக கடந்து சென்று மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய, அனுமதிப்பது எப்படி என்று படிப்போம்.**

***1யோவா 4:7** பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.*

***8** அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.*

எப்போதெல்லாம் அன்பு உங்களிடம் இருந்து மற்றொருவரிடத்தில் கடந்து செல்லுகிறதாக நீங்கள் அறிகிறீர்களோ, அது தேவன் உங்கள் மூலமாக மற்றவரிடத்துக்கு கடந்து செல்லுவதாகும். அன்பு என்று நாம் தமிழில் உபயோகப்படுத்தும் வார்த்தைக்கு கிரேக்க மொழியில் நான்கு வார்த்தைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதில் ஒன்றாகிய " அகாப்பே " அன்பு என்பது, இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக அன்பு. இது தேவ அன்பு. ஒருவருடன் நாம் பேசும்போது, இந்த தெய்வீக அன்புக்கும், கவர்ச்சி அல்லது ஆசைக்கும் உள்ள வித்தியாசத்தை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இந்த தெய்வீக அன்புதான் நம்மிடம் இருந்து கடந்து செல்லுகிறதா, அல்லது நம் மாமிச, ஆத்துமாவின் மற்ற வகையான ஏதாவது ஒருஅன்பு கடந்து செல்லுகிறதா என்பதை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அகாப்பெ தேவ அன்பு உங்களிடம் இருந்து மற்ற ஒருவரிடத்துக்கு கடந்து செல்லுவதை நீங்கள் நிச்சயமாக உணரும்போது - அது தேவன் கடந்து செல்லுவதாகும்.

தேவ அன்பு உங்களிடம் இருந்து மற்றொருவரிடத்துக்கு கடந்து செல்லுவதாக நீங்கள் பகுத்தறிந்தால், அதன் பின் செய்ய வேண்டியது, அதன் தொடர்ச்சியாக சில உற்சாகமூட்டும் வார்த்தைகளை அவர்களிடம் சொல்லுங்கள் அல்லது அப்படிப்பட்ட எதாவது ஒரு செயலை செய்யுங்கள். அவர்களை வேதனைப்படுத்துகிற எந்த காரித்தையும் கடிந்து கொள்ளுங்கள். அது பிசாசின் கிரியையோ, அல்லது நோயோ என்றால் அதை விரட்டுங்கள். வேறு ஏதேனும் ஆலோசனை தேவைப்பட்டால் அதை சொல்லிகொடுங்கள். நடை முறையிலான ஒரு சிறு உதவி, அவர்களுக்கு வாகன வசதி கொடுப்பதோ, ஆகாரம் கொடுப்பதோ, அவர்கள் பிள்ளைகளை பார்த்துக்கொள்வதோ, பண உதவியோ இப்படி உங்களால் முடிந்த ஏதாவது ஒரு வழியில் அவர்களுக்கு ஊழியம் செய்யுங்கள். இவை எல்லாவற்றையும் எல்லோராலும் செய்ய முடியாது. ஆனால் எல்லோராலும் ஏதாவது ஒன்றையாவது நிச்சயமாக செய்ய முடியும்.

இயேசு கிறிஸ்துவும் இம்முறையிலேயே ஊழியம் செய்தார்.

***மத் 14:14** இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் **மனதுருகி,** அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.*

இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த மக்கள் மேல் கொண்ட மனதுருக்கம், அன்பு - இதன் மூலமாகவே தேவனுடைய வல்லமை அவர் வழியாக கடந்து சென்றது.

*மத் 8:2 அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.*

*மத் 8:3 இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.*

நீங்கள் செய்வது ஒரு பெரிய நிகழ்ச்சியாகவோ, பெரிய வார்த்தைகளாகவோ இருக்க வேண்டும் என்பது இல்லை. தேவன் அன்பாக இருக்கிறார். எப்போதெல்லாம் தேவ அன்பு உங்கள் மூலமாக கடந்து செல்லுகிறதோ, அது தேவன் கடந்து செல்லுவதாகும் என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி நீங்கள் உணரும்போது அதற்கடுத்த படியான காரியங்களை உடனே செய்ய வேண்டும். எந்த நபருடன் தேவன் தொடர்பு கொள்ள விரும்புகிறாரோ, அந்த நபரை உடனே சந்தியுங்கள், அவரோடு பேசுங்கள், ஏதாவது அவருக்கு ஆசீர்வாதமாக செய்யுங்கள். தேவன் அதற்கான வார்த்தைகளை தருவார். தேவன் உங்களை உபயோகிப்பார். நீங்கள் மனதுருக்கத்தோடு உங்களை சுற்றி இருப்பவர்களோடு தொடர்பு கொள்ளும்போது, அவர்களுக்கு ஊழியம் செய்யும் போது, தேவன் உங்களை உபயோகித்து அவர்களை விடுவிப்பார்.

இப்படி செயல்பட்டு, தேவன் கடந்து சென்று ஊழியம் செய்ய அனுமதிக்கிற சீஷனாக, தேவனுக்கு பயன்படுகிற சீஷனாக இருங்கள்.

## ஆவிக்குரிய வரங்களை உபயோகப்படுத்துகிறவன் சீஷன்.

*1பேது 4:11 ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*

இவ்வசனத்தில் " **தேவனுடைய வாக்கியங்கள்** " என்று சொல்லப்பட்டிருப்பது, பழைய ஏற்பாட்டில் மகாபரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த தேவனுடைய வார்த்தைகளை குறிப்பிடுவதாகும். இது தேவனுடைய வார்த்தையாகும். எனவே " தேவனுடைய வாக்கியங்களின் படி போதிக்கக்கடவன் " என்றால், அதன் உண்மையான அர்த்தம் " **தேவனுடைய வாயாக இருந்து பேசக்கடவன்** " என்பதாகும். தேவனிடம் இருந்து பெற்று பேசுவது போல பேச வேண்டும்.

"*ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்;* ..... இவ்வசனத்தின் இப்பாகம் சொல்லுவதென்னவென்றால், " நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்போது, நம்முடைய சுய பெலத்தினால் அல்ல - தேவன் தருகிற பெலத்தினாலேயே ஊழியம் செய்ய வேண்டும்.

விசுவாச வாழ்க்கையின் ஒரு முக்கிய காரியம், நாம் ஒருவரோடு பேசி நம் சுய பெலத்தினால் காரியங்களை பகிர்ந்து கொள்வது அல்ல.......**மாறாக தேவனே நம்முள் வந்து வசிக்கிறார். அவர் நம்மூலமாக பேசுகிறார், மற்றவர்களோடு தொடர்பு கொள்ளுகிறார்.** இயேசுவின் சரீரமாகிய சபையில் உள்ள ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட ஆவிக்குரிய வரங்களை, தேவன் கொடுக்கிறார். *1 கொரிந்தியர் 12* ம் அதிகாரம் சொல்லுகிறது, தேவன் தன் சித்தப்படி, நம் ஒவ்வொருவருக்கும் பல ஆவிக்குரிய வரங்களை தந்திருக்கிறார்.

தேவன் நம் எல்லோரிடத்திலும் இந்த வரங்கள் கிரியை செய்யும் படியாக செய்கிறார், எல்லோருக்கும் பிரயோஜனப்படும்படியாக செய்கிறார்.

தேவன் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக திறமைகளை வைத்திருக்கிறார். நீங்கள் அதை உணராமல் இருக்கலாம், அறியாமல் இருக்கலாம், ஆனாலும் இது தேவனுடைய வாக்குத்தத்தம். நீங்கள் , இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்தால், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், வேதாகமத்தை நன்கு படித்து அறிந்திருந்தால், தேவனிடம் இருந்து பெற்றவைகளை வாழ்க்கையில் அனுபவப்பூர்வமாக உபயோகப்படுத்திக்கொண்டிருந்தால் நிச்சயமாக "பரிசுத்த ஆவியின் வல்லமை உங்களுக்குள் கிரியை செய்து கொண்டிருக்கிறது" என்று நம்புங்கள். மற்றவர்களுடைய அற்புதங்கள் உங்களுக்குள் இருக்கிறது. மற்றவர்களுடைய அற்புதங்களை ஒரு விதை வடிவத்தில் தேவன் உங்களுக்குள் வைத்திருக்கிறார். இவ்விதைகளை விடுவித்து அவற்றை மற்றவர்களுடைய வாழ்க்கையில் அற்புதங்களாக்குவது உங்கள் கடமை. வேத வசனங்கள் சொல்லுகின்றன, இந்த திறமை நம் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கும் கொடுக்கப்படாமல் இல்லை.

*1 கொரிந்தியர் 12ம்* அதிகாரத்தில் 9 ஆவிக்குரிய வரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை

**ஞானத்தைப் போதிக்கும் வசனம்**; **அறிவை உணர்த்தும் வசனம்; விசுவாச வரம்; குணமாக்கும் வரங்கள்; அற்புதங்களை செய்யும் சக்தி; தீர்க்கதரிசன வரம். ஆவிகளைப்பகுத்தறியும் வரம்; பற்பல பாஷைகளைப்பேசும் வரம்; பாஷைகளை வியாக்யானம் பண்ணும் வரம்**; இன்னும் பல வரங்கள் இந்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன, நீங்கள் அவைகளை படித்து அறிந்து கொள்ளுங்கள். இவற்றில் இருந்து, நீங்கள் ஒவ்வொருவரும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கான விஷேஷித்த அபிஷேகத்தை - விஷேஷ வல்லமையை, பரிசுத்த ஆவியானவர் மூலம் பெற்றிருக்கிறீர்கள் என்று அறிந்து கொள்வீர்கள். ஒருவர் செய்வதைப்போன்றதான

ஊழியம், மற்ற ஒருவரால் செய்ய முடியாமல் இருக்கலாம். உதாரணத்துக்கு ஒருவருக்கு கற்பித்து கொடுக்கும் வரம் இருக்கலாம், உங்களுக்கு கற்பித்துக்கொடுக்கும் வரம் இல்லாமல் இருக்கலாம், என்றாலும் இயேசுவின் சரீரமாகிய சபையில் உள்ள ஒவ்வொருவராலும், தங்கள் விசுவாசத்தை மற்றவர்களோடு பங்கு வைப்பதன் மூலம் அவர்களுக்கு கற்பித்துக்கொடுக்கலாம். சிலர் குறிப்பிடத்தக்க வகையில் கற்பித்துக்கொடுக்க, சிலர் சபையின் பாஸ்டர்களாக பிரசங்கிக்க... அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**ரோமர்** 12 ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரங்கள். **தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரம்; ஊழிய வரம்; போதிக்கிற வரம்; புத்தி சொல்லுகிற வரம்; பகிர்ந்து கொடுக்கிற வரம்; முதலாளித்துவ வரம்; இரக்கம்;**

உங்களில் பலருக்கும் ஒரு திறமை, அல்லது ஒரு வரம் இருந்தும் நீங்கள் அதை அறியாதவர்களாக இருக்கலாம். மற்றொருவருக்கு ஒரு ஆசீர்வாதமாக இருப்பதற்கான மன விருப்பம் உள்ளவர்களாக இருக்கலாம். ஒரு இடத்துக்கு நீங்கள் செல்லும்போது அங்கே வறுமையில், துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய உங்களுக்கு விருப்பமாக இருக்கலாம். அவர்களோடு இணைந்து, அவர்களது வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்று அறிந்து, அவர்களுக்கு உதவி, ஊழியம் செய்கிறவர்களாக இருக்கலாம். இது எல்லாம் என்ன என்று தெரியுமா.. இது எல்லாம் ***இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக வரங்கள்.***

சீஷர்கள் எல்லோருமே ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும். முழுநேர உழியக்காரர்களாகவோ, பகுதி நேர ஊழியக்காரர்களாகவோ, நம் வேலையிடத்திலோ, அல்லது எங்கிருந்தாலும். இப்படியாக நம் பக்கத்தில் இருப்பவர்களுக்கோ, பிரயாணத்தில் சந்திப்பவர்களுக்கோ, யாருக்கு என்றாலும் ஊழியம் செய்யும்போது, தேவன் தந்திருக்கும் வரங்களை வைத்து ஊழியம் செய்ய வேண்டும். நம் சொந்த திறமைகளை வைத்து அல்ல. இதற்காக தேவனை நாடுங்கள். தேவன் உங்களுக்குள் வைத்திருக்கும் வரங்களை கண்டு பிடியுங்கள். சில வரங்களை, அது உங்களுடைய முழு நேர வேலை அல்ல என்ற காரணத்துக்காக ஒதுக்கி வைத்து விடாதிருங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் தெய்வீக திறமையை வைத்திருக்கிறார் என்று உணர்ந்து கொள்ளுங்கள். பின் தேவன் உங்களுக்குள் வைத்திருக்கிற வரங்களை உபயோகித்து மற்றவர்களுக்கு ஊழியம் செய்யுங்கள்.

இதற்காக சமயமும் பயிற்சியும் தேவை. முதலில் முழுவதும் சரியாக செய்ய முடியாமல் இருக்கலாம். அதனால் பயிற்சி செய்ய தயங்காதீர்கள். ஒருவேளை இதில் நீங்கள் ஏதாவது தவறு செய்து விட்டால், தேவன் உங்கள் மூலமாக கிரியை செய்ய வில்லை என்று அர்த்தம் அல்ல. இதனால் தேவன் உங்கள் மேல் கோபம் கொள்ள மாட்டார். மற்றவர்கள் எப்படியும் உங்களுடைய இதயத்தின் நேர்மையை காண்பார்கள். உங்கள் ஊழியத்தில் நீங்கள் முழுமையாக எல்லாவற்றையும் சரியாக செய்ய முடியாவிட்டாலும், உங்கள் அன்பு அவர்களுக்கு சரியாக ஊழியம் செய்யும். மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய தொடங்குங்கள். நீங்கள் தேவனிடம் இருந்து வரங்களை பெற்றவர்கள் என்ற உண்மையை முதலாவது அங்கீகரியுங்கள். பின் தேவன் உங்களுக்குள் வைத்திருக்கிற தெய்வீக வல்லமைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். **ஆவிக்குரிய வரங்களை உபயோகித்து, தேவனுக்கு பிரயோஜனமான சீஷனாக இருங்கள்.**

ஆவிக்குரிய வரங்களை நீங்கள் உபயோகப்படுத்தும்போது, அவை நீங்கள் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை உறுதிப்படுத்தும். எல்லா அடையாளங்களும் அற்புதங்களும் சுவிசேஷத்தை உறுதிப்படுத்துவதற்கென்றே தேவனால் ஏற்படுத்தப்பட்டவை.

*மத் 9:8 ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்.*

*மாற் 16:20 அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.*

*அப் 4:30 உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள்.*

*எபி 2:4 அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்.*

அன்பு சகோதரா, சகோதரி! இயேசு கிறிஸ்து உங்களை அழைத்திருப்பது ஒரு சாதாரண கிறிஸ்தவனாக வாழும்படியாக அல்ல, அவருடைய **"சீஷனாக"**. நீங்கள் சீஷனாக எப்படி வாழ்வது என்று படித்துகொண்டீர்கள். இன்றே ஒரு **"சீஷனாக"** பலரையும் இயேசுவின் **சீஷனாக்குகிற** சீஷனாக ஒரு புது வாழ்க்கையை தொடங்குங்கள். எழுப்புதலுக்காக பலரும் தேவனை நோக்கி கதறிக்கொண்டிருக்கிறார்கள். எழுப்புதலை கொண்டு வரவேண்டியது நாம், நீங்கள். ஒவ்வொரு விசுவாசியும் இயேசு அழைத்த சீஷனாக, மற்றவர்களை சீஷனாக்கும் சீஷனாக வாழுவோம். அப்படி இருந்தால், நம் தேசம் மாத்திரம் அல்ல, உலகத்தின் பெரும்பான்மையான மக்களும் சில வருடங்களுக்குள்ளாக இரட்சிக்கப்படுவார்கள். தேவன் உங்களோடு இருக்கிறார். **"சீஷனாகுங்கள்" " சீஷனாக்குங்கள்".**

ஆசீர்வாதமாக இருங்கள்.
ஆமென்.

BRO. D.VERGIN KUMAR.

For any doubts, clarifications kindly contact me in deeveekumar@yahoo.com Ph; 25572195, 99663557. Your comments are welcome.

**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Adam Clarke's Bible commentary, Vine's expository Dictionary of Bible words, Strong's Bible concordance, Identity in Christ - By Andrew Wommack, Call to Discipleship. By Donkrow, D.E.Lessons by Don Krow, etc.. All bible quotes are from King James Version bible.